உ

கடவுள்துணை.

சந்திரவதி புலம்பல்,

(முதற்பாகம்.)

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்பமுதலிவீதி, மதராஸ். என். சி.

132

உ

கடவுள் துணை.

சந்திரவதி புலம்பல்.

நேரிசை வெண்பா.

சீராரயோத்தியையாள் செம்மலரிச் சந்திரன்
பேரார்சரித்திரத்தைப் பேசுதற்கு—ஓராருஞ்
செஞ்சடையிற்கங்கையொடு திங்களணிந்தோன் மகிழுங்
குஞ்சரத்தின் செஞ்சரணைக் கோர்.

சந்திரவதிபுலம்பல் விருத்தம்.

வயிற்றிடமாகவுன்னை வைத்தொருபத்துமாதம்
பயன்பெறலாமென்றெண்ணி பரிவுடன்பெற்றேனையோ
இயல்புடன்வளர்ந்தேனுன்னை ஈயெறும்பணுகிடாமல்
கயநரிப்புலிகள்சூழும் காட்டில்வாழ்பாம்புக்கோதான்.

வ-ம் அகோதெப்படியென்றால் தர்பையறுக்க அனுப்பின தேவதாசனை சர்ப்பந்தீண்டி இறந்ததாய் அசலாத்துப்பிள்ளைகள் சொன்னவுடன் சந்திரவதியம்மன் ஐயரை விடை கேட்டுக்கொண்டு காட்டில் நடக்கும்போது காலில்தட்டிய மகனைக்கண்டு புலம்புவது காண்க.

சந்திரவதி-இ-ம்-பியாக்-தாளம்-ஆதி.

பாலாயெனைப்பிரிந்தாயோ துஷ்டசர்பத்
தாலே கடித்திறந்தாயோ.

பாலாயெனைப்பிரிய மேலோர்கள்செய்சதியோ
காலால்தட்டியெத்தே னுலாகலையுணர்ந்த (பா)

பிறந்த அருமையென்னடா ஐயோமகனே
வளர்ந்த பெருமை யென்னடா

சிறந்தசெங்கோலரசு துறந்துவேதியர்வீட்டில்
இருந்து அடிமையன்னும் அருந்தமனம்வெறுத்து

தந்தைகுடைதாங்குவாயென்று ஐயோமகனே
சிந்தையில் நினைத்தேனேயன்று

சிந்தைகளிகூர்ந்தரசு செய்துவரும்நாளையிலே
விந்தையாய்விளைந்தகடன் வந்துதோபாம்பாகயின்று

மறுபடியும்கரத்திலேந்திக்கொண்டு புலம்பல்.

ஐயோமகனேபிது அநியாயமநியாயம் அநி
அரவினுக்கிரையான தநியாயமநியாயம் (ஐ)

அரம்சிறையிலப்பா அழுதாயோதொழுதாயோ
அணைப்பாரிங்கில்லாமலம்மாவென்றழைத்தாயோ
முன்னே சர்ப்பத்தைக்கண்டு முழித்தாயோ யழைத்தா
பின்னேயாதரவற்று பேசாமல்நின்றாயோ [யோ

மண்ணாளுவாயென்று மகிழ்ந்தேனே புகழ்ந்தேனே
மண்மேல்படுக்கக்கண்டேன் மணிக்குடல்பதறுதே
பாவிநான்பிள்ளையென்றும் பலனில்லை அலனில்லை
பாம்புக்கிரைகொடுத்து பரதேசியானேனான்.

பாலன் பிறப்பானம்மே என்னும் வர்ணமெட்டு.

பாலாவெனைப்பிரிய கொடும்பாவி தவப்பலனோ
காலால்தட்டியெடுக்க காசிநாதன் செயலிதுவோ
பெற்றகுடல்துடித்து அப்பா பற்றியெரியுதடா
சற்றேமுகம்பாரடா அப்பா பெற்றுமலடியடா
ஆவிபதைத்துஇங்கே என்னை கூவிதுடிக்கவிட்டாய்.

சந்திரவதிசொல்-சாமா-இ-ப்-ஏகதாளம்.

கரடிபுலிநாகம் சிங்கமுறங்கிடுங் கானகம்படுத்தாய்
மிகதுடித்தாய் உயிர்விடுத்தாய் மகனே காலமா
முனியே அப்பாகோலமா கோலமா கோலமா கோலமா

ஐயோமகனேயுன்னை அரவந்தீண்டிட அரனார்செய்
சதியோ தலைவிதியோ காலகெதியோ
மகனே ஆருமா துயர்தீருமா அப்பா தீருமா தீருமா

பாலனே உனை பாம்புக்கிரைதர ப்ாவிநான்பெற்றேனே
வரம் பொய்த்தேனே பிர்மன் செத்தானே
பாரினிலினியானிருந்தென்னபாரமோபாரமோபாரமோ

எப்படிஉனைவிட்டுப் பிரிந்திருப்பேன் கணந்தரிப்பேன்
மனம்பொறுப்பேன் மகனே என்னமோ
முன்செய்தகர்மமோ அப்பாகர்மமோ கர்மமோ கர்மமோ

வீட்டிலிருந்துநீ காட்டினில்சென்று
விஷத்தினுலிறந்தாய் எனைமறந்தாய் பிள்ளைபிறந்தாய்
ஏதடா தெய்வகூடா அப்பா கூ-கூ-கூ.

பத்துமாதஞ் சுமந்துபெற்ற மகனே உன்னை
பாம்புக்கோ வளர்த்தேன் இரைகொடுத்தேன்
பழிஎடுத்தேன்பாபமோஎவர்சாமோ அப்பா-சா-சா-சா

உன்னைப்பெற்றதந்தைவந்து என்னைக்கேட்டால்
உரைப்பதென்சொல்லடா வயதல்லடா மனங்கல்லடா
தூக்கமோ தந்தை யேக்கமோ அப்பா ஏ-ஏ-ஏ.

உன்தந்தைவந்தாரிதோ சிந்தைகலங்காதே
மைந்தனேபாரடா மொழிகூரடா யினியாரடா
மாயமோ அப்பா மாயமோ மாயமோ மாயமோ.

அம்மா அம்மாவென்று அழைத்தமொழியிங்கே
யார்வந்துதடுத்தா ருனைக்கெடுத்தார் பழிகொடுத்தார்
அவனியிற்கொடும்பாவி யென்னைப்போலாரடா.

காட்டிலுனைவளர்த்து கண்ணீர்பெருகியழ கர்மியென்
பாவமோ குருசாபமோ எவர்கோபமோ
கூறுயோ கண்ணால் பாராயோ அப்பா பா-பா-பா.

பாலனுயிர்பறித்த பாழுஞ்சர்ப்பமே யிந்த
பாவியைத்தீண்டவா விஷங்கொண்டுவா பலனுண்டுவா
வேண்டாயோ என்னைத் தீண்டாயோ ஐயோ தீ-தீ-தீ.

மன்னன்பிரிந்ததும்மைந்தனிறந்ததும்மா தவர்குறையோ
பிரமனுரையோ எவர்முறையோ கர்மியோ
பாபஜென்மியோடா பாபஜென்மியோடா ஜெ-ஜெ-ஜெ.

சர்ப்பந்தீண்டையில் கெர்ப்பங்கலங்கிநீ எப்படி
யேங்கினுய் விஷந்தாங்கினுய் காட்டில்தூங்கினுய்
சாபமோ தந்தைசோபமோ அப்பா சோ-சோ-சோ.

அரவஞ்சிறையில் அம்மா அம்மாவென்று அலறிநீ
பார்த்தாயோ முகம்வேர்த்தாயோ உயிர்தோர்த்தாயோ
ஆரிட்டசாபம் நேரிட்டதிந்தக் காட்டிலே கா-கா-கா.

அப்பா அரசாண்டநாளையில் மாண்டிருந்தாலும் நீ
தண்டுதளம்வருமே புகழுறுமே கனம்பெறுமே
ஆராதே துயர்தீராதே அப்பா தீ-தீ-தீ.

பெற்றமலடியென்று பேரைத்தாங்கவோ [தேன்
பெண்ஜென்மமெடுத்தேன் கிளிவளர்த்தேன் பரிகொடுத்
பெண்ணிற்பாவிகளென்னைப் போலுண்டோ தே-தே-தே.

சந்திரவதி-இ-ம்-நவரோஸ்-தாளம்-ஆதி.

மைந்தனில்லையென்றுசொல்லிமாதவங்கள்செய்தனேயோ
தேவனே பிர்மதேவனே
சிந்தைகளிதீர்க்கவென்று சித்திரம்போலேயளித்தாய்
தேவனே பிர்மதேவனே
சித்திரம்போலேயழித்த செங்கரியையேன்பரித்தாய்
தேவனே பிர்மதேவனே
ஆச்சரியக்கடனைப்பட்டு அரசாட்சிநீங்கச்செய்தாய்
தேவனே பிர்மதேவனே
நாடிழந்துநகரிழந்து நாதனையும்பிரியவைத்தாய்
தேவனே பிர்மதேவனே
அன்னையும்சேயனுமாக அடிமைத்தொழில்செய்யவைத்
தாய் தேவனே பிர்மதேவனே

பாவிநான்பிள்ளைபெற்று பட்டதுயர்போதுமையா
தேவனே பிர்மதேவனே
தர்மமுறைதப்பினேனோ தபசிகளையேசினேனோ
தேவனே பிர்மதேவனே
பிள்ளையெங்கேஎன்றுபெற்ற தந்தைகேட்டாலேதுசொ
ல்வேன் தேவனே பிர்மதேவனே.

சந்திரவதிசொல் விருத்தம்.

அப்பனேமகனேவுன்னை அரவினுக்கிரையாய்த்தந்து
இப்படிப்பரதவிக்க விறையவனெழுதினனோ
சொற்பனமறியேனையோ சுந்திரதேவதாசா
எப்படியுன்னைத்தூக்கி யீமத்துக்கேகுவேனன்.

சந்திரவதி சுடலைக்குப்போகுதல் ஐம்பை.

மாதவங்கள்செய்துபெற்ற மைந்தனைக்கரத்திலேந்தி
பாதகிநான்சுடலைகரை பார்க்கயின்றுபோரேன்
அருந்தவங்கள்செய்துபெற்ற அன்னமதைநானேந்தி
பருந்துநாய்பேய்வாழும் பாழ்சுடலைபோரேன்
இப்படியென்சுதனை யிருகரத்திலேந்தி
செப்பரியசுடலைகரை சேரவிதிவசமோ.

முதற்பாகம் - முற்றிற்று.